# மொரீசியசில் தைப்பூசக் காவடித் திருவிழா: சமூகப் பண்பாட்டுக் கூறுகள்
# *Kavadee* festival in Mauritius from a Socio - Cultural Perspective

முனைவர் உமா அழகிரி / Dr Uma Allaghery[1]

**Abstract**

Thai *Pusa Kavadee* festival is celebrated with great fervour nationally in Mauritius. Records indicate that the *Kavadee* procession was held for the first time in 1874 at Port Louis, the capital city of Mauritius. This article describes the Kavadee festival, which falls within the month of *Thai*, in Mauritius from a socio-cultural perspective. This qualitative paper adapts a descriptive mode in explaining the participant observations made by the researcher. The findings show that almost all the Mauritian Hindus are directly or indirectly involved in the *Kavadee* festival. Their contributions during this festival include modes of fasting, special prayers, pilgrimage, and upholding good conducts, which are also the major considerations discussed in this paper. The reasons for carrying the *Kavadee*, its importance and the impact it has among the Mauritian Hindus are highlighted in this paper as well.

Date of submission: 2021-06-02
Date of acceptance: 2021-06-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr Uma Allaghery
Email: u.allaghery@gmail.com

**Key Words:** Thaip Pusak Kavadee, procession, socio - cultural, participant observation, mode of fasting, pilgrimage, good conducts

### முன்னுரை

உலக வாழ் தமிழர்களின் வாழ்வில் திருவிழாக்கள் ஒரு முக்கியமான இடம் பெற்று வருகிறது. அத்திருவிழாக்களுள் காவடித் திருவிழா குறிப்பிடத்தகுந்தது. மொரீசியசில் முருகப் பெருமான் தமிழர்களால் மட்டுமல்லாமல் தமிழர் அல்லாதோர் பலரால் போற்றி வணங்கப்படுகிறான். மொரீசியசில் உள்ள பெரும்பாலான கோவில்கள் முருகனுக்குரியது. தமிழருக்குரிய திருவிழாவாக விளங்கிய தைப்பூசக் காவடி காலப்போக்கில் ஒரு பொதுவான திருவிழாவாக ஆகிவிட்டது. இது நாட்டளவில் பரவலாகக் கொண்டாடப்படுகிறது. இது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது. மொரீசியசில் தைப்பூசக் காவடியைச் சமூக அளவில் கொண்டாடும் முறையையும் பண்பாட்டு அளவில் ஏற்படும் வளர்ச்சியையும் இக்கட்டுரை விளக்குகிறது. மொரீசியசு சமூகத்தில் முருகப்பெருமான் பெறுமிடத்தையும் தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாட்டையும் அறிவது இக்கட்டுரையின் முதன்மை நோக்கம் ஆகும்.

### முந்தய ஆய்வு

மொரீசியசில் காவடித் திருவிழா பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. இதைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதப்பட்டன. ஒரு சில இங்குக் குறிப்பிடப்படுகின்றன. "மொரீசியசில் பண்பாட்டுக் கூறுகள்வழி தமிழ்மொழி கற்பித்தல்", "மொரீசியசில் முருகப்பெருமானும் திருப்புகழ்ப்

[1] The author is a lecturer in the Department of Tamil Studies, Mahatma Gandhi Institute, Mauritius. u.allaghery@gmail.com

பாடல்களும் பெறுமிடம்", "மொரீசியசில் முருக வழிபாடு" ஆகிய கட்டுரைகள் முந்தய ஆய்வுகளாக விளங்குகின்றன. இவை தமிழ் மொழியிலும் பிரஞ்சு மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இவை முனைவர் உமா அழகிரியால் எழுதப்பட்ட கட்டுரைகள் ஆகும். இதற்கு முன் இத்தலைப்பை ஒட்டிக் கட்டுரை எழுதப்படவில்லை.

## தரவுகளும் ஆய்வு நெறியும்

மொரீசியசில் தைப்பூசக் காவடித் திருவிழா: சமூகப் பண்பாட்டுக் கூறுகள் என்ற தலைப்பு கொண்டுள்ள இவ்வாய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. "குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மனத்தில் வைத்துக்கொண்டு ஒன்றை நுணுக்கமாக நோக்குவது உற்றுநோக்குவது உற்றுநோக்கல் எனப்படும்", (முத்துச்சண்முகன், வேங்கடராமன், 2013). "உற்றுநோக்கலை இரு வகையாகப் பிரிக்கப்படும். அவற்றுள் ஒன்று உற்று நோக்கல் அல்லது உடனிருந்து நோக்குதல்" (Participant observation), (முத்துச்சண்முகன், வேங்கடராமன், 2013) என்பது ஆகும். பங்குபெறும் உற்றுநோக்கல் அல்லது உடனிருந்து நோக்குதல் என்பதில் ஆய்வாளர் தாமும் ஒருவராக இருந்து அப்பொருளில் தம்மையும் கலந்து, வாழ்ந்து, பெறும் அனுபவம் இவ்வகையில் சிறப்பான ஒன்று. இவ்வகையைக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இப்பணிக்குப் பண்பு சார் நூலக ஆய்வும் விளக்கவியல் ஆய்வுமுறையும் உடனிருந்து நோக்குதல் ஆய்வும் பின்பற்றப்பட்டுள்ளன.

## மொரீசியசில் காவடித் திருவிழா

மொரீசியசில் தைப்பூசக் காவடி முதன் முதலில் கிட்டத்தட்ட 1874ஆம் ஆண்டில் போட்லூயி என்னும் தலைநகரத்தில் நடைபெற்றது எனக் கூறப்படுகிறது. மொரீசியசில் கிட்டத்தட்ட இருநூறு கோவில்கள் எழுப்பப்பட்டன. அவற்றுள் அதிகமானவை முருகப் பெருமானுடைய கோவில்கள். மொரீசியசு தமிழர்களுக்குக் குலத் தெய்வமாக விளங்குகின்றவன் முருகப் பெருமானேதான் என்று கூறுவது மிகையாகாது. 'சிவ சுப்பிரமணியர் கோவில்', 'அருள்மிகு தண்டாயுதப்பாணி கோவில்', 'திருத்தணி முருகன் கோவில்', 'அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்' முதலியவை முருகன் கோவில்களுக்குப் பெற்றுள்ள பெயர்கள் ஆகும். பால முருகன், வேல் வடிவம், முருகப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் கொண்டுள்ள வடிவம், ஆண்டிக் கோல வடிவம், ஆறுமுகம் ஆகிய வடிவங்கள் கொண்ட கற் சிலைகள் கோவில்களில் வைக்கப்பட்டுள்ளன. தைப்பூசம், பங்குனி உத்திரம், சித்தரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை, ஆவணி மூலம் முதலிய நன்னாள் அன்று காவடித் திருவிழா கோவில்களில் இடம்பெறும். அவற்றுள் தைப்பூசம் மற்றும் சித்திரைப் பௌர்ணமி காவடி பெரும் அளவில் கொண்டாடப்படுகின்றன.

ஆய்வாளரின் உடனிருந்து நோக்குதல் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது; கண்டுள்ள சமூகப் பண்பாட்டுக் கூறுகள் கீழ்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

## விரதம் இருத்தல்

"விரதம் இருப்பது என்பது வழிபாட்டிற்கு மிக முக்கியமான ஒரு கூறாகக் கருதப்படுகிறது" (பொன்னையா, பால்தம்புராஜ், 2014). விரதம் இருத்தல் என்பது தமிழர்களிடத்தில் காணப்படும் ஒரு சிறந்த பழக்கம் ஆகும். திருவிழாவின்போதும் சமயச் சடங்குகளின்போதும் தமிழர்கள் நோன்பு மேற்கொள்வார்கள். உண்ணா விரதம், மௌன விரதம், மரக்கறி சாப்பிடுதல் என இவை போன்ற விரதங்கள் பொதுவானவை. காவடித் திருவிழாவின்போது காவடிகளையும் பால்குடங்களையும் எடுக்கின்றவர்கள் பொதுவாக விரதம் இருப்பது வழக்கம். அவர்கள் மரக்கறி உணவு வகைகளைச் சாப்பிடுவார்கள்; வெளிச் சாப்பாடு சாப்பிடாமல் வீட்டில் சமைத்த சாப்பாட்டை மட்டும் உட்கொள்வார்கள். ஒரு சிலர் உண்ணா நோன்பு மேற்கொண்டு இரவு நேரத்தில் சாப்பாடு சாப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். விரதம் இருந்தால் உடல்நலம் சீராகும். சாப்பாடு அளவில் மட்டுமல்லாமல் கட்டில்மேல் தூங்காமல் பாய் விரித்துத்

தரையில் தூங்குவார்கள். கள் உண்ணாமை, புகை பிடிக்காமை ஆகிய பழக்கத்தைக் காவடித் திருவிழா விரதத்தின்போது ஒருசிலர் கைவிடுவார்கள். புகை பிடித்தல் என்ற தீய பழக்கத்தை விட்டுவிடாமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். காவடித் திருவிழா சமயத்தில் பக்தர்கள் முருகப்பெருமானுடைய பேரருளைக் கிடைக்கத் தியாகம் செய்கிறார்கள்; ஒழுக்க நெறியைப் பின்பற்ற முயற்சி செய்கிறார்கள்.

### பக்திப் பரவசம்

மொரீசியசில் தைப்பூச நாளன்று ஒரு பொது விடுமுறை நாள். அன்றைக்கு பக்தர்கள் விடியற்காலையில் ஆற்றங்கரையில் கூடுவார்கள். ஆற்றங்கரையில் குளித்துக் காவி நீற ஆடையை உடுத்திக்கொள்வார்கள். ஆற்றங்கரையில் வண்ண வண்ணக் காவடிகள் வரிசை வரிசையாக வைத்தல், சாம்பிராணி போடுதல், ஊதுவத்தி ஏற்றுதல், கற்பூரம் கொளுத்துதல், பக்திப் பாடல்கள் ஒலித்தலும் பாடுதலும், முருகப் பெருமான்மீது சிந்தை வைத்துத் தியானித்தல், அலகு குத்துதல், வேல் அபிடேகம் செய்தல், அர்ச்சனைப் பொருட்களைத் தயாரித்தல் முதலியவை கண்கொள்ளாக் காட்சியாக அமையும். நாட்டளவில் கொண்டாடப்படும் தைப்பூசக் காவடித் திருவிழா ஊர்தோறும் பக்தர்கள் பால்குடங்களையும் காவடிகளையும் எடுத்து வீதி வலமாகக் கோவிலை நோக்கிச் செல்வார்கள். வீதியில் ஒரு சிலர் பானகம் பகிர்ந்துகொள்வார்கள்; வேறு சிலர் பழங்களையும் பலகாரங்களையும் கொடுப்பார்கள். ஈதல் நமக்கு மகிழ்ச்சி தருகிறது; மனநிறைவு ஏற்படுகிறது. ஈகையின் சிறப்பினைப் பற்றி,

> "யாவர்க்கும் ஆம் இறைவனுக்கு ஒரு பச்சிலை
>
> யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை
>
> யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
>
> யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே" - (திருமந்திரம், முதல் தந்திரம் 16, பாடல் 252)

என்று திருமூலர் ஈகை செய்யும் முறைகளை மிக அழகாக விளக்கம் தருகிறார்.

தெருவெல்லாம் சூடாக இருக்கும்; வழியைத் தணிந்துகொள்ளக் கால்நடையாக வருகின்றவர்களுக்கு நீரும் மஞ்சள் நீரும் ஊற்றுவார்கள். இது மக்களுடைய மனிதாபிமானத் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. பெண்கள் கும்மியும் கோலாட்டமும் அடிப்பார்கள். நாட்டளவில் ஆயிரக்கணக்கான மக்கள் திரு உலாவில் கலந்துகொள்வதைக் காணலாம். எங்கும் முருகப் பெருமானுடைய பக்திப் பொங்கும் பாடல்களைக் கேட்கலாம். ஒரே பக்தி வெள்ளம் நாட்டளவில் நிகழ்வதை உணரலாம்.

### வணிக லாபம்

எந்த விழாவாகவோ அல்லது திருவிழாவாகவோ இருந்தாலும் தேவையான பொருட்களை வாங்குவது அவசியம். அச்சமயத்தில் வணிகர்கள் நல்ல லாபம் செய்வார்கள். திருவிழாவுக்குத் தேவையான பொருட்களின் விலை அதிகரிக்கும். பீன்சு, பலாக்காய், தேங்காய், வாழைப்பழம், பால், பூக்கள் போன்ற முதன்மையான பொருட்களின் விலை உயரும். மக்கள் வேறு வழியில்லாமல் அவற்றை வாங்குவது உண்டு. இவ்வாறு வாணிப லாபம் அதிகரிக்கும்; நாட்டின் பொருளாதாரமும் உயரும் என்பது திண்ணம். மக்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்குமாறு வணிகர்கள் எடுக்கும் முயற்சியைப் பாராட்டத்தக்கது.

### அன்னதானம்

மணிமேகலையில் அன்னதானம் சிறப்பிக்கப்படுகிறது. சீத்தலைச் சாதனார் மணிமேகலை என்னும் பாத்திரத்தின் வாயிலாக இவ்வறச் செயலைச் சுட்டிக்காட்டுகிறார். தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது கோவிலில் கொடியேற்றம் முதல் கொடி இறக்கம் வரை பெரும்பாலான கோவில்களில் அன்னதானம் வழங்கப்படும். 'பிரியாணி', அறு சுவை உணவு, சர்க்கரைப் பொங்கல், சுண்டல், பானகம், புளிச்சாதம் முதலியவை பூசைக்குப் பிறகு பக்தர்களுக்கு வழங்கப்படும். காவடித் திருவிழா அன்று ஒரு

சிலர் கோவிலுக்கு வருகின்ற அனைவருக்கும் உணவு அளிப்பது வழக்கம். ஒரு சிலர் சாப்பிடுவதோடு வீட்டுக்குக்கூட எடுத்துப் போவதும் உண்டு. தமிழர் அல்லாதோர்க்கு ரசம் மிகவும் பிடிக்கும். அதனால் அவர்கள் புட்டிகளில் வீட்டுக்குக் கொண்டு போவார்கள். அன்றைக்கு சாம்பார், ரசம், வாழைக்காய், உருளைக்கிழங்கு, பீன்சு, பறங்கிக்காய், பலாக்காய் என்ற அறுசுவை உணவோடு பாயசம், அப்பளம் மற்றும் வடை முருகப்பெருமானுக்குப் படையலாக வைத்த பிறகு எல்லாருக்கும் பகிர்ந்துகொள்வார்கள். உணவு வகைகளைப் பரம்பரைப் பரம்பரையாகப் பேணிக் காக்க அன்னதானம் உதவுகிறது. மேலும் மக்களிடத்தில் உள்ள விருந்தோம்பல் பண்பை இதனால் அறிய முடிகிறது.

### வேற்றின மக்களின் ஈடுபாடு

மொரீசியசில் நாளடைவில் தமிழர் அல்லாதோர் பலர் முருகப் பெருமானைப் பய பக்தியோடு வணங்கத் தொடங்கினார்கள்; இந்திக்காரர், தெலுங்கர், மாராட்டியர், கிறித்துவர் ஆகியோர் பத்து நாட்கள் விரதம் இருந்து காவடி தூங்குவார்கள்; பத்து நாட்களாக நடைபெறும் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொள்வார்கள்; அவர்கள் தேவைப்படும்போதெல்லாம் கோவிலில் உதவி செய்வார்கள். ஊர்வலத்தின்போது தேரை அலங்காரம் செய்தல், கோவில் வளாகத்தை அலங்காரம் செய்தலும் தோரணம் கட்டுதலும், அன்னதானம் வழங்குதல், கோவிலைச் சுத்தம் செய்தல் ஆகியவற்றில் பங்கு எடுத்துக் கொள்வார்கள். தைப்பூசக் காவடியில் மட்டுமல்லாமல் சித்திரைக் காவடியிலும் வேற்றின மக்கள் காவடிகளையும் பால்குடங்களையும் எடுப்பதைப் பெருகிக் கொண்டே வருகிறது எனலாம். தமிழர் வழிபாட்டு முறைகளில் அவர்கள் காட்டும் அக்கறையை இது புலப்படுத்துகிறது. காவடியை அலங்காரம் செய்வதற்கு முருகப்பெருமானுடைய பல்வேறு படங்களை வாங்கிக் கொண்டு காவடித் திருநாளன்று தங்கள் காவடிகளில் கட்டிவிடுவார்கள். கண்கண்ட தெய்வமான முருகப்பெருமான்மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது. மேலும் நாட்டில் இன ஒற்றுமை உணர்வை வலுப்படுத்துகிறது; அமைதியும் நிலவச் செய்கிறது.

### சிறப்பு வழிபாடு

நம் அன்றாட வாழ்வில் வழிபாடு பிரிக்க முடியாத ஒரு கூறு ஆகும். முருக வழிபாடு தமிழரின் பண்பாடு, மொழி, தத்துவம் ஆகியவற்றோடு இணைந்துள்ளது எனலாம். மொரீசியசு தமிழர் பொதுவாக வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் நடைபெறும் வழிபாட்டில் கலந்துகொள்வது உண்டு. ஆனால் திருவிழாக் காலங்களில் பத்து நாட்களாக நடத்தப்படும் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொள்வதைக் கவனிக்கலாம். காவடி மற்றும் பால்குடங்களை எடுக்கின்றவர்கள் கண்டிப்பாக மாலையில் ஆறு மணி தொடங்கி எட்டு மணி வரை நடைபெறும் வேள்வி, மலர் வழிபாடு, தீபாராதனை, கோவில் வலம் ஆகிய முக்கியச் சடங்குகளில் கலந்துகொள்கிறார்கள். இது புற வழிபாட்டின் முக்கியத்துவமும் முருகப்பெருமானுடைய பேரருளைப் பெறவும் அவர்களுடைய வேண்டுதல் நிறைவேறவும் காட்டுகிறது.

### ஊர்வலம்

கொடி ஏற்றத்துக்கு மூன்றாவது, ஐந்தாவது அல்லது ஏழாவது நாள் ஊர்கள்தோறும் ஊர்வலம் நடைபெறும். இது பொதுவாக மாலை நேரத்தில் செய்வது உண்டு. ஊர்வலத்தின்போது மக்கள் தங்கள் வீட்டு வாசலில் அர்ச்சனை செய்வார்கள். இது கோவிலுக்கு வர முடியாதவர்களுக்கு முருகப்பெருமானை வணங்க வழி அமைகிறது. ஊர்க்காரர்களுக்கு முருகப்பெருமானுடைய ஆசி கிடைக்க இது உதவுகிறது எனலாம். அன்றைக்கு ஊர்க்காரர்கள் பலர் ஊர்வலத்தில் கலந்துகொண்டு வருவதால் கோவிலில் கூட்டமாக இருக்கும். காவடித் திருவிழா நிகழும் என்று ஊர்வலத்தின் மூலமாக அறியாதோர்க்கு அறிய வைக்க உதவுகிறது.

### சங்கங்களின் பங்கு

தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது

மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பு, மொரீசியசு கலை மற்றும் பண்பாட்டு மையம் ஆகிய சங்கங்களின் பங்கு உயரியது. தைப்பூசக் காவடித் திருவிழாவினை முன்னிட்டு தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றி மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பின் சங்கத்தினர் திட்டமிடுகிறார்கள். தமிழகத்திலிருந்து ஓதுவார் அல்லது பாடகர் குழு மொரீசியசுக்கு வந்து கோவில்தோறும் சென்று கலைநிகழ்ச்சிகளை வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பின் பதிவுப்படி கிட்டத்தட்ட நூற்றிருபத்தைந்து கோவில்களில் தைப்பூசக் காவடி கொண்டாடப்பட்டது (பேட்டி:25ஆம் ஜனுவரி 2021). மொரீசியசு தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டு மையத்தின் கலைஞர்களும் கோவில்தோறும் சென்று கச்சேரியை வழங்குவார்கள். மேலும் மொரீசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பு கோவில்களுக்குப் பல வசதிகள் அளித்துவருகிறது. தைப்பூசக் காவடித் திருவிழா சீரும் சிறப்புமாக அமைவதற்கு சங்கங்களின் பங்கு போற்றத்தக்கது.

### அரசு ஆதரவு

தைப்பூசக் காவடித் திருவிழாவின்போது அரசாங்கம் பல வகையில் உதவி அளித்து வருகிறது. தண்ணீர் மற்றும் மீன்சார வசதிகள் அளித்தல், தெருக்களைப் பழுதுபார்த்தல், ஆற்றங்கரையையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்தல் முதலியவை பார்த்துக்கொள்கிறது. தைப்பூசக்காவடித் திருவிழா மிக முக்கியமான ஒரு திருவிழா, அதனால் அரசாங்கத்தினர் தமிழினத்துக்கு முடிந்த அளவில் ஆதரவு அளித்து வருகிறார்கள். அவர்களும் காவடித் திருவிழாவில் கலந்துகொள்கிறார்கள்.

### ஊடகத்தின் பங்கு

தைப்பூசக் காவடித் திருவிழாக் காலத்தில் வானொலி தமிழ் நிகழ்ச்சியில் திருப்புகழ்ப் பாடல்களும், அவனாசிப் பத்து, ஆறுமுக சுவாமி பேரில் அலங்கார விருத்தம், ஆறுமுக சுவாமி ஆசிரிய விருத்தம், கதிர்காம மாலை, காவடிச் சிந்து முதலியவையும் ஒலிபரப்பப்படும். தத்துவ உரைகளும் வழங்கப்படும். தொலைக்காட்சியில் கலைநிகழ்ச்சிகளும் உரைகளும் ஒளிபரப்பப்படும். நாட்டளவில் கோவில்களில் நடைபெறும் கொடி ஏற்றம், சிறப்பு வழிபாடு, கொடி இறக்கம் முதலியவை நிகழ்ச்சித் தொகுப்பாக வழங்கப்படும். தனியார் வானொலியிலும் காவடித் தொடர்பான நிகழ்ச்சி அளிக்கப்படும். பொதுவாக உரைகளின் வாயிலாகக் காவடித் திருவிழாவின் முக்கியத்துவம், அதைக் கொண்டாடும் முறை, முருகப்பெருமானின் பெருமை முதலியவற்றைப் பற்றி விளக்கங்கள் தரப்படும். மாலையில் செய்தி ஒளிபரப்பில் நாட்டின் நான்கு திசைகளில் நடைபெற்றுள்ள காவடித் திருவிழாவின் ஊர்வலத்தையும் சிறப்பு வழிபாட்டையும் காட்டப்படும்.

### மொழி மற்றும் இசையின் வளர்ச்சி

தமிழ் மொழியில் வழிபாடு செய்தல், தமிழில் உரைகளை ஆற்றுதல், திருப்புகழ்ப் பாடல்கள், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், முருகப்பெருமானைப் போற்றும் பக்தி ததும்பும் பாடல்கள் பாடுதல் ஆகியவற்றால் தமிழ் மொழியின் இனிமையைக் கேட்கும் வாய்ப்பு கிடைக்கிறது. காவடிப் பொருட்களை விற்கும் இடங்களில் முருகப்பெருமானுடைய பாடல்கள் இசைக்கப்படுகின்றன. தமிழில் உரைகள் ஆற்றப்படுகின்றன; தத்துவக் கருத்துக்களின் விளக்கங்கள் தரப்படுகின்றன. தமிழில் சிறப்பு நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் தமிழ் மொழியும் தமிழிசையும் பெரும் அளவில் கேட்கப்படுகின்றன.

### காவடி வடிவங்கள்

பால், தேன், இளநீர், சர்க்கரை, பன்னீர் முதலியவை அபிடேகப் பொருட்கள் ஆகும். மொரீசியசில் அதிகப் பக்தர்கள் பால் செம்புகளைக் காவடிகளின் இரு பக்கங்களில் கட்டுவது உண்டு. வண்ண வண்ணப் பூக்கள், மரு, பச்சைத் துளசி, தர்ப்பை, எலுமிச்சம், மணி, காவி நிறத் துணி, தென்னங்குறுத்து முதலியவற்றால் காவடிச் அலங்காரம் செய்யப்படுகிறது. மயில் வடிவம், கோவில் வடிவம், பிரணவப் பொருளான ஓம் என்னும் வடிவம், தேர்

முதலிய வடிவங்களைக் கொண்டு காவடிகள் கட்டப்படுகின்றன. காவடித் திருவிழாவின் முந்திய தினம் காவடிகளைக் கட்டத் தொடங்கப்படுகிறது. ஒரு சிலர் இரவு முழுதும் கண் விழித்துக் காவடிகளைக் கட்டுவார்கள். அவ்விரவு எட்டு நாற்பது மணி தொடங்கி, காலையில் ஐந்து மணி வரை வானொலியில் முருகப்பெருமான் பற்றிய பாடல்கள் ஒலிபரப்பப்படும். மக்கள் வானொலியைக் கேட்டுக் காவடிகளைக் கட்டுவதோடு முருகப்பெருமானை மனதார நினைத்தால் பயன் அடைவார்கள். பெண்மணிகள் குடங்களில் பொதுவாகப் பால் சுமந்து கொண்டு வருவதன் பழக்கம் நம்மிடத்தில் இருக்கிறது. காவடி மற்றும் பால்குடங்களை எடுக்காதவர்கள் ஒரு சிலர் காவடித்திருவிழா அன்று விடியற்காலையில் கோவில் வலம் வந்து பால் அபிடேகம் செய்வார்கள். எனவே அன்றைக்கு முருகனுக்கு வேண்டுதல் செய்யப் பலவகையில் அமைகின்றன. முருகப்பெருமானுடைய பேரருளைப் பெற எல்லாருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### யாத்திரை

பத்து நாட்கள் விரதத்தின்போது பக்தர்கள் தங்கள் ஊர்க் கோவிலுக்குப் போவது வழக்கம். ஆனால் பொதுவாக, சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பலர் நாட்டிலுள்ள வெவ்வேறான முருகன் கோவில்களுக்கு யாத்திரையாகப் போவார்கள். அபிடேகத்திலும் சிறப்பு வழிபாடுகளிலும் ஊர் வலங்களிலும் கலந்துகொண்டு அர்ச்சனை செய்வார்கள்; கலியுக வரதனைப் போற்றிப் பாடுவார்கள்; அன்னதானம் வழங்குவார்கள். திருவிழாவின் பத்து நாட்களில் விரும்பும் கோவில்களுக்குச் செல்வதற்கு இது ஒரு தனி வாய்ப்பு எனலாம்.

### ஆடை அணிகலன்கள்

புடவை, பாவாடை, வேட்டி முதலிய தமிழர் ஆடை வகைகளைக் கோவில்தோறும் காணலாம். கோவில் உறுப்பினர்கள் பெரும்பாலோர் வேட்டியைக் கட்டுவார்கள். பெண்மணிகள் புடவைகளைக் கட்டுதல், பலவகை அணிகலன்களை அணிதல், தலைமுடியில் பூக்களைச் சூட்டுதல் ஆகிய பழக்கங்களைத் திருவிழாக் காலங்களில் கடைப்பிடித்து வருவதைக் காணலாம். பொதுவாக வேலைக்குப் போகின்ற பெண்மணிகள் பலர் புடவையைத் தவிர வேறு ஆடைகளை அணிந்துகொள்வார்கள். திருவிழாக் காலங்களில் தங்கள் பண்பாட்டுக்குரிய அடையாளத்தைப் பேணிக் காத்து வருகிறார்கள்.

### இன அடையாளம்

மொரீசியசில் தமிழர்கள் காவடித் திருவிழாவைக் கொண்டாட அதிக அளவில் ஏற்பாடு செய்கிறார்கள். கோவில் சங்கத்தினர் காவடித் திருவிழா சிறப்பாக அமைவதற்குப் பல வகை முயற்சிகள் எடுக்கிறார்கள். காவடித் திருவிழா தமிழர்களுக்குரியது என்று பொது மக்களுக்கு அறிந்த ஒன்று ஆகும். காவடித் திருவிழா முருகப்பெருமானுக்குரியது. முருகப்பெருமான் தமிழ்க் கடவுள். முருகப்பெருமானைப் போற்றும் நாள் தைப்பூசம் உகந்த நாள் ஆகும். மொரீசியசில் அன்றைக்கு ஒரு பொது விடுமுறை நாளாகும். இவ்வகையில் தமிழர் என்ற ஓர் இனம் உண்டு என்று அடையாளம் கிடைக்கிறது. நாட்டின் வளர்ச்சிக்குத் தமிழர்களுடைய பங்கு உண்டு என்றும் தமிழர் பண்பாடு சிறப்புத் தன்மை வாய்ந்தது என்று இது சுட்டிக்காட்டுகிறது.

### காணிக்கை

பாவங்களை நீக்கவும், நல்வாழ்க்கை அமையவும், பேரருளைப் பெறவும் மக்கள் காணிக்கையாக ஒரு பொருளைத் தருவார்கள். மொரீசியசு தமிழர் பொதுவாக, கைக்குழந்தையுடைய முடியை தைப்பூசத் தினம் அன்று முருகப்பெருமானுக்குக் காணிக்கையாகக் கொடுப்பார்கள்; காணிக்கையைக் கொடுத்த பிறகு சந்தனம் தலையில் பூசிக் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்வார்கள். குழந்தைக்கு நல் வாழ்க்கை அமையப் பெற்றோர் வேண்டிக் கொள்வார்கள். வேறு சிலர் பணத்தை அல்லது உணவுப் பொருட்களைக் கோவில்களுக்குக் காணிக்கையாக வழங்குவதும் உண்டு.

### தத்துவக் கருத்துகளைக் கேட்டறிதல்

கந்த புராணம் முதலிய கதைகளைக்

கேட்டறிய முடியும். அக்கதைகளைப் பற்றிச் சிந்தனை செய்ய முடிகிறது. ஆன்மீக நெறியில் முருகப்பெருமானுடைய பங்கு யாது என்று அறிய வாய்ப்பு உண்டு. முருகப்பெருமானைப் பற்றி விரிவாக அறியலாம். சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கு முருகப்பெருமானைப் பற்றி கருத்தரங்கு மூலமாக விளக்கம் அளிக்கப்படுகிறது. காவடித் திருவிழா கொண்டாடப் பல சடங்குகள் உள்ளன. அச்சடங்குகளின் பொருள் யாது என அறியலாம். முருகப்பெருமானின் தனித் தன்மைகள், பெருமை, வீரச் செயல்கள் முதலியவை அறியலாம்; மேற்கொண்டு சிந்திக்கலாம்.

### பக்தர்கள் காவடிகளை எடுப்பதன் காரணங்கள்

காவடித் திருவிழா ஒரு மிகவும் முக்கியத் திருவிழாவாகும். இது சமூக அளவில் ஒரு விழிப்புணர்வு கொண்டு வருகிறது. காவடி எப்போது இருக்கும் என்று ஒரு சிலர் ஆவலுடன் கேட்டுக்கொள்வார்கள்; ஏனென்றால் அவர்கள் காவடி எடுக்காவிட்டாலும் விரதம் இருப்பார்கள். பொதுவாக, தைப்பூசக் காவடிக்கு அடுத்து மகா சிவராத்திரி வரும். எனவே ஒரு சிலர் தொடர்ச்சியாக மகா சிவராத்திரி வரை விரதம் இருப்பார்கள். காவடித் திருவிழா மற்றும் மகா சிவராத்திரி பெரும் அளவில் மொரீசியசில் கொண்டாடப்படுகின்றன. மொரீசியசில் பக்தர்கள் காவடிகளையும் பால்குடங்களையும் எடுப்பதன் காரணங்கள் இக்கட்டுரையில் தொகுக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு காண்க:

1. ஆங்கிலப் புத்தாண்டின் தொடக்கத்தில் முதல் முக்கியத் திருவிழாவாக இருத்தல்
2. தமிழர் புற வழிபாட்டு முறைகள் அவர்களைக் கவர்தல்
3. வேண்டுதலுக்கு இணங்கி இருத்தல்
4. கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்களாக இருத்தல்
5. முருகப் பெருமானுடைய பேரருளைப் பெறுதல்
6. ஒரு நல்வாழ்க்கை அமைதல்; உலக வாழ்க்கையில் மேம்பாடு அடைதல்
7. நோயற்ற வாழ்வை வாழ்தல்
8. ஒரு நோயைக் குணப்படுத்துதல்
9. தேர்வுகளில் நல்ல தேர்ச்சி பெறுதல்
10. நல்ல உயர்ந்த உத்தியோகத்தில் இருத்தல்
11. இறையன்பு இருத்தல்
12. ஆன்ம மேம்பாட்டிற்கு வணங்குதல்

### முடிவுரை

மொரீசியசில் காவடித் திருவிழா, விரதம் இருத்தல், பக்திப் பரவசம், வணிக லாபம், அன்னதானம், வேற்றின மக்களின் ஈடுபாடு, சிறப்பு வழிபாடு, சங்கங்களின் பங்கு, அரசு ஆதரவு, ஊடகத்தின் பங்கு, மொழி மற்றும் இசையின் வளர்ச்சி, காவடி வடிவங்கள், யாத்திரை, ஆடை அணிகலன்கள், இன அடையாளம், காணிக்கை, தத்துவக் கருத்துக்களைக் கேட்டறிதல், பக்தர்கள் காவடிகளை எடுப்பதன் காரணங்கள் ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. காவடித் திருவிழாவால் சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளில் பல நன்மைகள் கிடைக்கின்றன. நாட்டில் ஒற்றுமையுணர்வும் பரஸ்பர உணர்வும் சிந்தனையும் நிலைநாட்டுகின்றன; அன்பு நெறியை வலுவாக்க வழி அமைக்கிறது.

## References

BalaSubramanian, K. V. (2012). Aiviyal Nerigal. Anuradha Chennai: Publications.

Bhulorkarambai, A. (2014). Ayal Nadugalil Muruga Vazhipadu. Palnorkkup parvaiyil Murugat Tatthuvam II.

Muthusanmugan & Venkataramen S. (2013). Ilakkiya Araicchi Nerigal. Chennai: New Century Book House Pvt. Ltd.

Nandivarman, T., Siddantha Raththinam. (2014). Thirumuraigal Katthum Anbuneru, Sydney Murugan Saivaneri Manadu.

Nallasivam, K. (2014). Thirumuraigal Katthum Manithaneyam. Sydney Murugan Saivaneri Manadu.

Ponnaih Kartheges & Kingston PalthambuRaj. (2014). Thaippusat Thiruvizhavil Sinargalin idupadu. Proceedings of the International Conference on Murugabhakti.

Ramakrishnan S. (1992). Kriyavin Tarkalat Tamil Akarati, Fine Press, Chennai

Ravikumar, T. Dr., (2014), Thirumular Unartthum Samuganeri. Sydney Murugan Saivaneri Conference.

Uma Allaghery. (2010). Murugan Vazhipadu, Thondan, Thiruvalluvar Andu 2041, Thirpagai (Virothi), Suravam (Thai) 2010

Uma Allaghery. (2016). Morisiyasil Panpattu Kurugal Vazhi Tamizh Mozhi Karppittal. Chennai: 11th Ulaga Tamizh Asiriyar Manadu.

Uma Allaghery. (2019). Morisiyasil Thamizhar Kalaiyum Panpadum, Kalait Tamizh Aivuk Kalangal, Pannarttu karuttarangam, Katturai Thoguppu Chennai: International Institute of Tamil Studies.

https://www.mauritiusinsideout.com/thaipoosam-cavadee.html

https://arunprasathgs.blogspot.com/2011/01/blog-post.html